**மஸ்கெலியா பிரதேச சபையின் 2022.05.13 சபையமர்வு அறிக்கை**

2022.05.13ஆம் திகதி காலை 09.30 மணியளவில் கௌரவ தவிசாளர் G.செண்பகவள்ளி அவர்களின் தலைமையில் சபையமர்வு ஆரம்பமானது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இன்றைய சபையமர்விற்கு வருகை தந்துள்ள அனைவரையும் அன்புடன் வரவேற்பதோடு கடவுள் வணக்கத்துடன் இன்றைய சபையமர்வானது ஆரம்பமாகும். அடுத்ததாக கடந்த மாத சபையமர்வு அறிக்கையினை சபை அனுமதிக்காக முன்வைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை முடிவுக்கு வந்து தற்போது இந்நாட்டை பொறுப்பேற்றிருக்கும் பிரதமர் அதிமேதகு ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன். கடந்த சபையிலே, நாட்டில் சூழ்நிலை கருதி களியாட்ட நிகழ்வுகளை செய்யக்கூடாதென தீர்மான முடிவொன்று எடுக்கப்பட்டிருந்தது. அதையும் மீறி இந்த களியாட்ட நிகழ்வுக்கு அனுமதி கொடுத்தது என்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது. சபை எடுத்த தீர்மானத்தை தவிர்த்து இந்த களியாட்ட நிகழ்வுக்கு அனுமதி கொடுத்ததென்பது இந்த சபை அவமதிப்பதாகவே கருதப்படும். சபையில் எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்தப்பட்ட முடியாமல் போனதற்கான காரணம் என்னவென்று கௌரவ தவிசாளர் அவர்களிடம் கேட்கின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அன்றைய தினம் சபையில் களியாட்ட நிகழ்வுகளுக்கு அனுமதி கொடுக்க கூடாது என்ற தீர்மானத்தை எடுத்திருந்தோம். பின்னர் களியாட்ட நிகழ்வுக்கான பொருட்கள் அனைத்தையும் கொண்டுவந்து இறக்கி விட்டனர். நிறைய செலவழித்து தான் வந்துள்ளனர் என்று கூறினர். அதன் பின்னர் நான் ஏனைய கௌரவ உறுப்பினர்களை தொடர்பு கொண்டு இவ்விடயம் தொடர்பாக பேசினேன். பின்னர் உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்ததற்கமைய உறுப்பினர்களிடம் கையொப்பத்தை பெற்றுக்கொண்டு தான் இதற்கான அனுமதியினை வழங்கினோம், அவர்கள் கொண்டு வந்த பொருட்களை மீண்டும் கொண்டு செல்ல முடியாதென்பதால் அனுமதி வழங்கினோம்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

ஏற்கனவே இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடும் போது இவ்வாறான நிலைமைகளில் விசேட சபையை கூட்டி விசேட சபையினூடாக ஒரு தீர்மானத்தை எடுக்குமாறு நான் கூறியிருந்தேன். அவர்களின் நலன் கருதி இதற்கு அனுமதி வழங்கியிருந்தாலும் கூட, குறிப்பிட்ட ஒரு சில உறுப்பினர்களின் அக்கறை காட்டப்பட்டிருந்தாலும் கூட, ஏனைய உறுப்பினர்கள் உள்ளார்கள் என்பதனை கருத்திற்கொள்ளவில்லை என்பதனை தான் நான் கூற வருகின்றேன். என்னுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது கூட சபையின் தீர்மானத்திற்கு அமைவாக செல்லுங்கள் என்று நான் கூறியிருந்தேன், சபையென்பது 04, 05 உறுப்பினர்களை வைத்து கொண்டு செல்லும் சபையல்ல 16 உறுப்பினர்கள் உள்ளனர். ஒரு நாள் அவகாசம் வழங்கிவிட்டு அடுத்த நாள் விசேட சபையை கூட்டி முடிவொன்றை எடுத்திருக்கலாம். இவ்விடயம் தொடர்பாக நிறைய குற்றச்சாட்டுக்கள் வந்தன. குறித்த களியாட்டகாரர்களும் கடைசியில் நட்டப்பட்டு தான் சென்றுள்ளனர். ஒருசிலரை திருப்திப்படுத்த செய்யப்படும் வேலைகள் முழு சபையையும் அவமதிப்பதாக தான் உள்ளது. கடந்த சபையில் 75வீதம் இவ்விடயம் தான் பேசப்பட்டது சபை முடிந்து வெளியில் சென்றதும் இவ்வாறு நிலைமை உள்ளதென தொலைபேசி அழைப்பு வருகின்றது, அந்த நேரம் ஒரு சிலரின் பையை நிறைக்கவும் ஒரு சிலரை திருப்திப்படுத்தவும் தான் இவ்விடயம் நடைப்பெற்றுள்ளது, என்ன தான் பேசினாலும் சபையிலிருந்து வெளியே சென்றதும் அவ்விடயம் நடைமுறைப்படுத்தப்படாது, தற்போது இந்நாட்டிற்கு ஏற்பட்டுள்ள விடயங்கள் கூட இதே போன்ற செயற்பாடுகளினால் தான். சபைக்கெதிராக மக்கள் வரமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம், அவ்வாறான ஒரு நிலைமை வரக்கூடாது என்பதற்காக தான் கூறுகின்றேன், இனிமேல் சபையில் எடுக்கப்படும் தீர்மானங்களை எக்காரணம் கொண்டும் மாற்ற கூடாது.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கடந்த மாத சபையறிக்கையில் தீர்மான இல 05இன் படி களியாட்ட நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதி வழங்காமல் இருப்பது தொடர்பாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறெனில் சபையில் இவ்வாறொரு தீர்மானத்தை எடுத்துவிட்டு அவர்கள் பொருட்களை கொண்டு வந்து விட்டார்கள் என்பதற்காக எந்த முறையில் இந்த களியாட்ட நிகழ்வுகளை நடத்த அனுமதி வழங்கப்பட்டது என்ற விடயத்தை மிக

தெளிவாக கூற வேண்டும். இந்த சபை அறிக்கையினூடாக உள்ளூராட்சி திணைக்களம் எந்த இடத்தில் எந்த நிலையில் அவர்களுடைய கருத்து தொடர்பாக செயலாளர் பதிலளிக்க வேண்டும். எனக்கும் கௌரவ உறுப்பினர் ஒருவரினூடாக தொலைபேசி அழைப்பொன்று வந்தது. ஒரு சில விடயங்களையும் பகிர்ந்துக்கொண்டேன். களியாட்ட நிகழ்வினை உடனடியாக போடுவதென்றால் கௌரவ உறுப்பினர்களுக்கு என்ன நடக்கும்? என்று கேட்டேன், ஏதாவது பண்ணுவோமென கூறினார்கள் அதெல்லாம் பிரச்சினை இல்லை. சபைக்கென சட்டத்திட்டங்கள், விழுமியங்கள் உள்ளன. கையொப்பம் வைத்தார்கள் என்பதற்காக சபையின் தீர்மானத்தை மழுங்கடித்திருப்பதென்பது உள்ளூராட்சி சட்டத்திட்டங்களுக்கு மாறான செயற்பாடாக பார்க்கின்றேன், இவற்றுக்கு தவிசாளர் பதிலளிக்க வேண்டும். கௌரவ உறுப்பினர் ஆனந்தன் அவர்கள் கூறியது போல சபையில் பேசப்படும் விடயங்கள் மழுங்கடிக்கப்படுகின்றன. எனவே எமது சபைக்கு நிர்வாக பொறுப்பாக உள்ள செயலாளர் அவர்களும் இதற்கு பதிலளிக்க வேண்டும். சபையில் எடுக்கப்படும் தீர்மானத்தை தான் நான் நடைமுறைப்படுத்துவேனென செயலாளர் அவர்கள் நிறைய தடவை வலியுறுத்தியுள்ளீர்கள், ஆனால் இவ்விடயத்தை நடைமுறைப்படுத்திய போது ஏதாவது பிரச்சினை ஏற்பட்டிருந்தால் அப்பொழுது என்ன செய்வது? இவ்விடயம் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளர் காரியாலயம் அதிக கவனம் செலுத்த வேண்டும். கையொப்பம் வைத்தவர்களின் பெயர் விபரம், இதில் உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் துணை ஆணையாளர் அவர்களின் நிலைப்பாடு என்ன, இவ்வாறு செய்ய சட்டரீதியாக விடயம் உள்ளதா என்பதனையும் தெளிவுப்படுத்த வேண்டும். கடந்த சபையில் மொழிப்பிரச்சினை தொடர்பாக கூறுயிருந்தோம், அதற்கமைவாக தீர்மானமும் எடுக்கப்பட்டிருந்தது, எனினும் இம்முறை சபையறிக்கை வழங்கப்பட்ட கடித உறை முற்றுமுழுதாக சகோதர மொழியில் தான் உள்ளது, அதனை பார்த்ததும் என்னிடமும் கௌரவ உறுப்பினரிடமும், உங்களின் சபையில் தலைவர் சிங்களமா, செயலாளர் சகோதர மொழியா என்று கேள்வி எழுப்பினர். இது தொடர்பாக கடந்த சபையில் பேசியுள்ளோமென சபையறிக்கையை எடுத்துக்காட்டினோம். இதற்கு இவ்வாறு பதிலளித்துள்ளார்கள், ஆனால் இனி 02 மொழிகளிலும் அனுப்பப்படும் என்று கூறிவிட்டு, இவ்வாறு நடைபெற்றுள்ளது என்பதனை கூறினேன். 2022.04.11ம் திகதி அறிக்கையை அங்கீகரிப்பதாக இருந்தால் உள்ளூராட்சி துணை ஆணையாளரின் வெளிப்பாடு வெளிப்பட வேண்டும். தொலைபேசியினூடாக சரி தொடர்புகொள்ளவும். கடந்த காலங்களில் சபையில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு உள்ளூராட்சி துணை ஆணையாளர் காரியாலயம் மறுப்பு தெரிவித்துள்ளது, அது சட்டரீதியான ஒன்று இல்லை என கூறியுள்ளது. ஆனால் இவ்விடயம் தொடர்பாக என்ன நிலைப்பாட்டில் உள்ளதென அறிந்துக்கொள்ள வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

விசாரணை அதிகாரிக்கு இவ்விடயம் தொடர்பாக தெரிவித்துள்ளோம், அவர் அது தொடர்பாக பதில் அனுப்புவார்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

எங்களுக்கு இது தொடர்பாக ஒன்று ஆவண ரீதியாக காண்பிக்க வேண்டும், இல்லா விட்டால் அனைத்து விடயங்களையும் விளக்கி உள்ளூராட்சி துணை ஆணையாளர் காரியாலயத்திற்கு அனுப்பிய கடிதமாவது இருக்க வேண்டும். அதனை விட்டு விட்டு தீர்மானத்தை கொச்சைப்படுத்துவதனை ஏற்றுக்கொள்ள முடியாது, இதற்கு தகுந்த பதில் தேவை இல்லாவிட்டால் இந்த அறிக்கையை முன்மொழிந்து வழிமொழிவதில் எந்த விதமான அர்த்தமும் இல்லை.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

களியாட்ட நிகழ்விற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக கடந்த சபையில் கலந்துரையாடப்பட்டிருந்தது. சபை நிறைவுற்றதும் குறித்த களியாட்டகாரர்கள் அனைவரும் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக நின்றுக்கொண்டிருந்தனர். நானும் கௌரவ உறுப்பினர் திஸாநாயக்க அவர்களும் அங்கிருந்த ஒருவர் எனக்கு 07 இலட்சம் ரூபா நட்டம் நான் விசமருந்த போகின்றேன் என கூறினார் . தங்க நகைகளை வைத்து தான் செலவுகளை மேற்கொண்டதாக கூறினார். நானும் சற்று நேரம் வாதாடி பார்த்துவிட்டு பின்னர் சென்று விட்டேன், ஆனால் அன்று மாலை இது சம்பந்தமாக கலந்துரையாடி அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது, என்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டார்கள் நான் முடியாதென கூறிவிட்டேன். இதேபோல தான் ஒவ்வொரு விடயத்திலும் நடைபெறுகின்றது. கோழி கடை டென்டர், இறைச்சி கடை டென்டர் போன்ற விடயங்களிலும் இவ்வாறான விடயமே நடைபெற்றது, இந்த சபையை கேளி கூத்தாக நடத்துகின்றனர். கட்டிடம் கட்டுவதற்கு சில சட்டத்திட்டங்களை போடுகின்றோம், அங்கு சென்று சிலர் வாங்கிவிட்டு, இதெல்லாம் பேசி காலத்தை வீணடிப்பதனை விட்டு விட்டு இவ்விடயத்திற்கு தீர்க்கமான முடிவொன்றை எடுக்கவும்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ உறுப்பினர்கள் மக்கள் சார்பான பிரச்சினைகளை முன்வைத்து தத்தமது கருத்துக்களை முன்வைத்து களியாட்ட நிகழ்வை நிறுத்த சபையினூடாக தீர்மானித்திருந்தோம், தவிசாளர் கூறிய பதிலில் இருந்து வருகின்றேன், களியாட்டகாரர்கள் பொருட்களை கொண்டு வந்து விட்டனர் செய்ய வழியில்லை.

நாங்கள் சபையை முடித்து விட்டு இந்த வீதியில் நடந்து செல்லும் போதே தொலைபேசி அழைப்பு வருகின்றது, நிறுத்திவிட்டீர்களாமே என்று, இது சம்பந்தப்பட்டு பேசிய உறுப்பினர்களுக்கே சம்பந்தப்பட்டவர்கள் தொலைபேசியினூடாக தகவல்களை கொடுப்பது யார்? சபை விடயங்களை உளவு பார்ப்பது யாரென்பது கேள்வி. இதனை முதலில் கண்டறிய வேண்டும், ஏனென்றால் இது சபை உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தலாக அமையும். 07 இலட்சம் நட்டமாகிவிட்டது நான் நஞ்சு அருந்த போகின்றேன் என்று கூறுபவர்கள் கொலை செய்ய மாட்டார்கள் என்பதனை எவ்வாறு உறுதி செய்வது? நிகழ்நிலை மூலமாக தீர்மானமெடுக்க கூடிய நிலை இந்த நாட்டிலே ஏற்பட்டுள்ளது. இந்த தொலைபேசியினூடாக கலந்துரையாடி தீர்மானத்தை மாற்றியமைக்க கூடிய சட்டத்திட்டங்கள் இந்த புத்தகத்தில் வழங்கப்பட்டுள்ளதா என்பதனை தவிசாளர் அவர்கள் உறுதிப்படுத்தவும். சபையின் நடவடிக்கைகளை எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்கான சட்டத்திட்டங்கள் உள்ளன. அதை மீறி செயற்பட்டமைக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று தவிசாளரிடம் கேட்க முடியாது, இதற்கான தலைமையே தவிசாளர் அவர்கள் தான் எனவே இந்த சபையினூடான அவதானிப்பு வேலைகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்கள் இதற்கான உரிய முறையான விசாரணை ஒன்றை மேற்கொள்ள வேண்டும். நிதிக்குழு எடுக்கும் தீர்மானத்தை சபை நிராகரிக்க முடியாது என்ற ஒரு நிலைப்பாடு உள்ளதென கொள்ளுங்கள், நிதிக்குழு எடுக்கும் ஒரு சில விடயங்கள் இங்குள்ள ஏனைய உறுப்பினர்களுக்கு அது ஒரு தவறான விடயமாகவோ, அதனை நடைமுறைப்படுத்தும் போது பாதகமாக இருக்கும் போது அதனை ஏனைய உறுப்பினர்கள் கேட்கதான் வேண்டும், நாட்டின் தற்போதைய சூழ்நிலை, நாட்டு மக்களின் பிரச்சினை என்பவற்றை கருத்திற்கொண்டு தான் இதனை நிறுத்த வேண்டும் என்று தீர்மானித்திருந்தோம், அப்படி இருக்கும் போது தவிசாளர் அவர்களுக்கு நெருக்கமாக இருக்கலாம், உறுப்பினர்கள் இதுக்கான பங்காளிகளாக இருந்தார்களா என்பது எனக்கு தெரியாது. எனக்கும் தொலைபேசி அழைப்பு வந்தது, மக்கள் சார்பான பதிலை சபையில் முன்வைத்துள்ளேன், அதில் என்றும் நான் பின்வாங்க மாட்டேன், தங்களின் பதிலும் அவ்வாறு தான் இருக்கும் என்று என்னுடன் பேசிய உறுப்பினர்களிடம் கூறினேன், அதையும் மீறி செயற்படுவதாக இருந்தால் அதற்கான பதிலை கூறுபவராக இருப்பார்கள் என்பதனையும் தெரிவித்திருர்தேன். எனவே எமது சபை நடவடிக்கைகள் பாதை மாறி செல்வதனை கடந்த வருடங்களில் அவதானித்திருந்தாலும் கூட, இவ்வருடத்தை அதிகரித்துள்ளனர். இன்னும் சரியான சபை நடவடிக்கைக்கு நாம் வரவில்லை. எனவே தவிசாளர் அவர்கள் எவ்விடயமாக இருந்தாலும் தாங்களுக்குரிய அதிகாரத்தை சரியாக பயன்படுத்த வேண்டும். ஏனையவர்களுக்காக தாங்களின் பதவி நிலையில் இருந்து கீழிறங்க வேண்டாம். சபை நடவடிக்கை சரியாக செல்ல வேண்டும் என்றால் தலைவர் தான் சரியாக செயற்பட வேண்டும். அதனை விட்டு விட்டு மற்றவர்களுக்காக வளைந்து கொடுத்தால் சபையை கொண்டு செல்ல முடியாது. சபை நடவடிக்கைகளை அவதானிக்கும் அதிகாரியின் கடிதத்தை நாங்கள் பார்க்க வேண்டும். தீர்மானத்தை விட்டு வெளியில் சென்றமைக்கான காரணத்தை கண்டறிந்து தெரியப்படுத்த வேண்டும். விசாரணை குழு அமைக்க வேண்டும் என்று கூறுவோம், என்ன குழு அமைத்தார்கள் என்ன விசாரித்தார்கள் என்று தெரியாது. சபையறிக்கையினை திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளுவோம், ஆனால் திருத்தியமைக்கப்பட்ட அறிக்கை எப்போதும் சமர்ப்பிக்கப்படவில்லை. இங்கு பேசியதோடு விடயம் கடித உறையில் உள்ள மொழி பிரச்சினை தொடர்பாக கௌரவ உறுப்பினர்கள் கூறியிருந்தனர். தவிசாளர் அவர்கள் சரியான முறையில் நிலை நிறுத்தாமல் பதவி காலத்தை நிறைவு செய்ய போகின்றீர்கள் இது தான் உண்மை. எங்களுக்கு மொழி உரிமை வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் மொழி ஆட்சி மொழியாக உள்ளது. தமிழ் பிரதிநிதிகள் இந்த சபையில் நிறைந்து உள்ளோம், செயலாளர், தலைவர் என்போர் உள்ளீர்கள். எப்போது நாம் எமது உரிமைகளை உறுதிப்படுத்தப்போகின்றோம்? ஆகவே தவிசாளர் அவர்கள் கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து செயற்படுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நான் யாருக்காகவும் வளைந்து கொடுத்து போகும் ஆள் கிடையாது. சில சந்தர்ப்பங்களில் யாரும் பாதிப்படையும் போது அந்த பாதிப்புக்கு நாம் காரணமாகிவிடக்கூடாது என்பதற்காக தான் எதையும் ஏனையோர் வந்து கேட்கும் போது சரி என்று கூறுகின்றோம். ஒருவருக்கு இங்கு வந்து பாதிப்பு ஏற்பட்டால் அதற்கான முழுபொறுப்பையும் நான் தான் கூற வேண்டும். அவ்வாறான சூழ்நிலைகளில் ஒரு சில விடயங்களை நான் பொறுப்பேற்றுள்ளேன். அந்தந்த உறுப்பினர்களுக்கு அந்தந்த மொழியில் கடிதம் வந்திருக்கும், ஆனால் அஞ்சல் நடவடிக்கைகளை செய்பவர்கள் சகோதரமொழியில் இருந்தால் அவரகள் சகோதரமொழியில் கடித உறை எழுதியிருப்பார்கள். கடிதம் தமிழில் வராமல் இருந்திருந்தால் அதற்கு நான் பொறுப்பு கூறலாம். எதிர்வரும் காலங்களில் கடித உறை அந்தந்த மொழிகளில் அனுப்பப்படும் உறுப்பினர்கள் கையொப்பமிட்ட கடிதத்தின் பிரதி வழங்கப்படும், கையொப்பம் இடாத உறுப்பினர்களின் கையொப்பம் பெற்று பிரதியை வழங்குங்கள்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இதுவரை 04 பேர்தான் கையொப்பம் இட்டுள்ளார்கள் என்றால் அதன் பிரதியை தாருங்கள் தற்போது கையொப்பமிட முடியாது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இல்லை, அன்று தொலைபேசியினூடாக தொடர்பு கொண்ட உறுப்பினர்களில் சிலர் பின்னர் கையொப்பமிட்டு தருவதாக கூறியுள்ளனர்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இல்லை, இது பெரிய பிரச்சினைக்கான நிலைமையை உருவாக்கும், 04 பேர் தான் கையொப்பமிட்டுள்ளனர். கௌரவ உறுப்பினர் கூறியதோடு இன்னொரு விடயத்தையும் தான் கூற வேண்டும். குறிப்பிட்ட நபர்கள் பொருட்களை கொண்டு வந்ததற்காக நாம் யோசித்தோம், ஆனால் கௌரவ சபையில் தீர்மானித்து விட்டோம் என்பதனை யோசிக்கவில்லை, இன்று தான் இக்கடிதத்தில் கையொப்பமிடுவீர்களானால் அது சிக்கலை ஏற்படுத்தும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அவரவரின் விருப்பத்தின் பெயரில் கையொப்பம் இடலாம் தானே?

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இன்று கையொப்பமிட முடியாதே? தீர்மானம் எடுத்த தினத்தன்று கையொப்பமஜட்டிருந்தால் அதனை ஏற்றுக்கொள்ளலாம். மேலும் மொழி தொடர்பான விடயத்திற்கு தவிசாளர் பிழையான ஒரு கருத்தை பதிலாக அளித்தீர்கள், இவ்விடயம் தாங்களுக்கு பிரச்சினையாக இருக்காது, தாங்களுக்கு இணைப்பாளர் உள்ளார், செயலாளர் உள்ளார். கடிதங்களை மொழிப்பெயர்ப்பு செய்து கூறுவார்கள் ஆனால் எங்களுக்கு இது ஒரு பிரச்சினை.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கடிதம் தமிழ் மொழியில் தானே உள்ளது, அலுவலகத்தில் அஞ்சல் சேவையை முன்னெடுக்கும் உத்தியோகத்தர் சகோதர மொழியை சார்ந்தவராயின் கடித உறை சகோதர மொழியில் இருந்திருக்கும். எல்லா விடயங்களையும் ஒரு பிரச்சினையாக பார்க்காதீர்கள். சிங்கள மொழியில் அனுப்பப்படும் கடிதங்களின் பிரதியினை உறுப்பினர்களுக்கு வழங்கும் போது மொழிபெயர்த்து வழங்குமாறு கடந்த சபையிலே கூறிவிட்டோம்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்விடயத்தை தான் கௌரவ தவிசாளர் அவர்களே பிழையாக விளங்கிக்கொண்டுள்ளீர்கள். எங்களுக்கு கடிதப்பிரதியினை வழங்கும் போது அதனை மொழிபெயர்த்து வழங்கும் படி நாங்கள் கூறவில்லை, கடிதமொன்றை அனுப்பும் போது தமிழ்மொழியிலும் அனுப்பும்படி தான் அன்று கூறினோம். அதனை விட்டு விட்டு சகோதரமொழியில் கடிதத்தை அனுப்பி விட்டோம் அதனை மொழிபெயர்ப்பு செய்து தருகின்றோம் என்று கூறுவதில் அர்த்தமில்லை.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நான் அனுப்பும் கடிதத்தை நான் எந்தமொழியிலும் அனுப்பலாம் தானே?

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சபையில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு தான் கடிதம் அனுப்பப்படுகின்றது, தனிப்பட்ட செண்பகவள்ளி அவர்களினூடாக கடிதம் அனுப்பப்படவில்லையே.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

தாங்களுக்கு வரும் கடிதம் தமிழ்மொழியில் வந்தால் சரிதானே?

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

இந்த சபையில் நாடகமாக நடிக்கின்றார்கள் என்று தான் நான் நினைக்கின்றேன், அன்று இவ்விடயத்தை ஒரு பிரேரணையாக கொண்டு வந்தது கௌரவ உறுப்பினர் ராஜ்குமார் அவர்கள் இந்த களியாட்ட நிகழ்வை யாரை கேட்டு இங்கு கொண்டு வந்தீர்கள்? இதற்கான அனுமதியினை வழங்கியது யார்? பின்னேரம் இது மாற்றப்பட்டுள்ளது. இது சபையின் நேரத்தையும் காலத்தையும் வீணடிக்கும் வேலையாகும். சபை ஆரம்பித்த

காலத்தில் இருந்து இதேதான் நடைபெறுகின்றது. இதற்காக இவருக்கு அழைப்பொன்று சென்றுள்ளது, கையொப்பம் இருங்கள், சிறிய கணக்கொன்றை தருவதாக கூறியுள்ளனர், இவ்வாறான கேவலமான விடயங்களையும் தவிர்க்க வேண்டும். இதனை சபை ஏற்றுக்கொள்ள முடியாது, களியாட்ட நிகழ்வில் பிழை ஏற்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இந்த மஸ்கெலியா நகரம் எவ்வித பிரச்சினையும் இல்லாமல் கலவர பூமி ஆகாமல் இருப்பதற்கு எல்லாம் வல்ல இறைவனை பிராத்தித்துக்கொள்வதுடன், 02 விடயங்கள் இங்கு பேசப்பட்டது. அதில் ஒன்று கையூட்டு சபையில் மனிதாபிமான அடிப்படையில் ஒரு சில முடிவுகளை கொடுத்தோம். கௌரவ உறுப்பினர் ராஜ்குமார் என்ற ரீதியில் நான் இது வரையில் எந்த கையூட்டும் பெற்றதில்லை. அவ்வாறு நான் பெற்றதாக நிரூபித்தால் எனது இந்த பதவியினை நான் இராஜினாமா செய்கின்றேன். குறித்த களியாட்ட நிகழ்விற்கு பொறுப்பான நபர் எனது வட்டாரத்தை சேர்ந்தவர், அன்றைய தினம் நானும் சபையில் இக்களியாட்ட நிகழ்வு வேண்டாமென வாதிட்டிருந்தேன், அன்று நான் 02 கருத்தை முன்வைத்திருந்தேன், நிதிக்குழு ஒரு முடிவை எடுக்கும் போதே இது பரிசீலனைக்குட்படுத்தியிருக்க வேண்டும். நிதிக்குழு தீர்மானிக்கப்பட்டு சபை தீர்மானத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது, சபை தீர்மானம் நடந்து முடியும் முன் அவர்கள் மைதானத்தை Booking செய்து பொருட்களையும் கொண்டு வந்து விட்டனர். எங்கெங்கு பிழை நடந்துள்ளதென்றால் முதற்படி நிதிக்குழுவில், நிதிக்குழுவில் அனுமதி வழங்காமல் இருந்திருந்தால் அவர்கள் பொருட்களை கொண்டு வந்திருக்க மாட்டார்கள். போக்குவரத்து செலவு எல்லாம் சேர்த்து எனக்கு 03 இலட்சம் நட்டமாகிவிட்டதென ஒருவர் கூறிக்கொண்டு அழுகின்றார். ஒருவர் மனிதாபிமான ரீதியில் ஒரு விடயத்தை கேட்கும் போது தற்கொலை செய்து கொள்ள போவதாக கூறும் போது அவர் தற்கொலை செய்ததன் பின்னர் நாம் சென்று அஞ்சலி செலுத்துவதில் எவ்வித பயனும் இல்லை. யாரும் பாதிப்படைய கூடாதென நினைத்தோம். யாரும் நஸ்டமடைய கூடாது என தான் நினைத்தோம். ஆனால் அவர்கள் தற்போது 06 இலட்சம் ரூபா நட்டமடைந்துள்ளது என கூறுகின்றனர். கையூட்டை, சட்டை பையை நிரப்புவதோ இங்கு இல்லை. என்னுடன் பேசிய நபரின் தொலைபேசி அழைப்பின் ஒலி பதிவு என்னிடமுள்ளது, என்னிடம் வந்து பேசியவர் எனது கட்சிகாரர் கூட இல்லை, எனக்கு எதிரானவர் தான். இருந்தாலும் மனிதாபிமான அடிப்படையில் தான் அனுமதி வழங்குமாறு கூறியிருந்தோம். வேறு எந்த நோக்கமும் இல்லை. சபை நடவடிக்கைக்கு அப்பால் சென்றது சபையை அவமதிப்பதாக உள்ளது என ஏனைய உறுப்பினர்கள் கூறிய விடயத்தை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அதனை விவாதிக்க நான் வரவில்லை. எனவே இவ்விடயத்திற்கு அனுமதி வழங்கிய உறுப்பினர்களை கொச்சைப்படுத்த வேண்டாம்.

**கௌரவ உறுப்பினர் S.A.திஸாநாயக்க அவர்கள் (ஸ்ரீ.பொ.பெ)**

களியாட்ட நிகழ்வு நடத்துவது தொடர்பாக நான் கடந்த சபையிலும் பேசியிருந்தேன், களியாட்ட நிகழ்வை நடத்தியவர்கள் எனக்கு தெரிந்தவர்களோ அல்லது உறவினர்களோ அல்லது நண்பர்களோ கிடையாது. அவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். நிதிக்குழுவின் மூலம் அனுமதி வழங்கியதன் பின்னர் அனுமதிப்பத்திரம் அச்சிட்டு, விளையாட்டு மைதானத்தையும் முன்பதிவு செய்து எல்லா வேலைகளையும் முடித்த பிறகு, இதனை சபையில் முன்வைத்து தீர்மானம் ஒன்றை எடுத்து அப்படியானால் இதனை நிறுத்துவோமென கௌரவ தவிசாளர் அவர்கள் கூறுகிறார். அவ்வாறு தீர்மானங்கள் எடுக்க முடியாது. 02 பக்கங்கள் பற்றியும் சிந்திக்க வேண்டும். அவர்களுக்கு நியாயம் கிடைக்குமா அல்லது அநீதி இழைக்கப்படுமா என பார்க்க வேண்டும். அல்லது பெற்றுக்கொண்ட பணத்தை மீளளிக்க வேண்டும். அவ்வாறு எதையும் கூறாமல் நிறுத்துவோம் என்று கூறினார். அவர்களை அழைப்பித்து கௌரவ உறுப்பினர்களுடன் கலந்துரையாடி அதன் பின்னர் தற்போதைய நிலையை தெளிவுப்படுத்தி சபையின் அனுமதி இல்லாவிட்டால் நிறுத்த வேண்டி வருமென அவர்களுக்கு தெளிவூட்ட வேண்டும். அவர்கள் அலுவலகத்திற்கு வந்து அழுது புலம்பி இலட்சக்கணக்கான பணம் செலவு செய்து விட்டோமென கூறுகின்றார்கள், நாடு முழுவதும் அறிவித்தல் ஒட்டப்பட்டு பதாதைகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன, அனுமதிப்பத்திர டிக்கட்டும் அச்சடித்து முடிந்து விட்டது. இப்போது நாம் என்ன செய்வது என கேட்கின்றார்கள், மனிதகுலத்திற்கான உதவி என்ற வகையில் நாம் கௌரவ தவிசாளர் அவர்களுடன் கலந்துரையாடி இவர்களுக்கு என்ன செய்வது என கேட்டோம், அப்போது கௌரவ உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்கினால் எனக்கு பிரச்சினை இல்லையென கௌரவ தவிசாளர் அவர்கள் கூறினீர்கள், அதன் பின்னர் தான் கௌரவ உறுப்பினர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென அவ்விடயத்திற்காக கதைத்தோம், மற்றது அவர்கள் பணம் கொடுத்திருந்தால் அதனை நிரூபித்துக் காட்டுங்கள். நாம் அதற்கு முகங்கொடுக்க தயாராக உள்ளோம், மஸ்கெலியா பிரதேச சபையினால் எமக்கு இவ்வாறு செய்தார்கள் என அவர்கள் வெளியிலே கூறக்கூடாது என்பதற்காக தான் இவ்வாறான ஒரு வேலையை செய்தோம். குறிப்பிட்ட சில நாட்களுக்காக சபைக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது, அதற்கு மேலதிகமாகவும் செலுத்தப்பட்டுள்ளது. சபைக்கு ஒரு வழியில் வருமானம் ஈட்டித்தரப்பட்டுள்ளது, இதில் பிரச்சினை ஏற்படுவது அவர்களுக்கு தான், எனவே அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் இருக்குமாயின் அதனை முன்வையுங்கள், அவர்களுடைய சிரமத்தை புரிந்துக்கொண்டு தான் நாம் அதற்காக கதைத்தோம்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தவிசாளர் அவர்களே, இதிலிருந்து ஒரு விடயம் விளங்குகின்றது, இங்கு செய்ய வேண்டிய எல்லா விடயங்களையும் செய்து விட்டு ஒப்புக்கு தான் இங்கு சமர்ப்பிக்கின்றீர்கள், கௌரவ உறுப்பினரின் உரையிலிருந்து என்ன தெரிகின்றதென்றால் எல்லா விடயங்களும் செய்து முடிக்கப்பட்டு விட்டது, சபைக்கு சமர்ப்பிக்கும் முன்னர் டிக்கட்டும் அடித்து முடிக்கப்பட்டு விட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

டிக்கட் அச்சிடப்பட்டிருக்கவில்லை.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

இந்த சபையினை கேளிக்கூத்தாகும் வேலையினை தான் செய்துள்ளீர்கள், இதற்கு அனுமதி கொடுக்கும் முன் சபைக்கு சமர்ப்பித்திருக்க வேண்டும், விசேட சசபையாவது கூட்டியிருக்க வேண்டும். அவ்வாறு செய்திருந்தால் இவ்வளவு பிரச்சினை வந்திருக்காது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் அவர்களே, சபைக்கு சமர்ப்பிக்கும் போது நிதிக்குழுவிற்கு சமர்ப்பித்த போது அவர்கள் மைதானத்தை தான் Booking செய்திருந்தார்கள். சபை நிறைவுற்ற பின்னர் தான் அவர்கள் டிக்கட் அடித்துக்கொண்டு வந்தார்கள்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

சபை நடைபெற்று நாம் அனுமதி கொடுப்போமா இல்லையா என்பது கூட தெரியாமலே அவர்கள் எப்படி டிக்கட் அச்சிடுவார்கள், இல்லா விட்டால் பொருட்களை கொண்டு வந்து விட்டனர் ஏனைய ஏற்பாடுகள் செய்து முடிக்கப்பட்டு விட்டன என்று சரி சபையில் கூறியிருக்கலாம் தானே? ஆனால் தீர்மானம் எடுத்த பின் அதனை மாற்றுவதில் இந்த சபைக்கு என்ன கௌரவம்? அன்றைய தினமே கௌரவ உறுப்பினர்கள் அனைவரையும் தொலைபேசியில் அழைத்து விசேட சபையை கூட்டி தீர்மானத்தை எடுத்திருக்கலாம். அதை செய்யாதது தான் பிழை என்று கூறுகின்றோம். இந்த கடைசி காலக்கட்டத்தில் சரி சபை எடுக்கும் தீர்மானங்களுக்கு முக்கியத்துவமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். நடந்த தவறை ஒப்புக்கொள்ளவும்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இந்த களியாட்ட நிகழ்வு தொடர்பாக ஒரு சில விடயங்களை கூறலாமென நினைக்கின்றேன், இந்த நாட்டின் சூழ்நிலை காரணமாக களியாட்ட நிகழ்வுகளை நடத்த கூடாது எனவும் பார்வையிட செல்பவர்கள் பாதிப்படைய கூடாது என்றும் அன்று கூறப்பட்டது. ஏனைய உறுப்பினர்கள் கூறியது போல இந்த களியாட்ட நிகழ்வானது சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீறி செய்யப்பட்டுள்ளது என்பதனை நான் மனமார ஒப்புக்கொள்கின்றேன். இங்கு பணம் பெற்றுள்ளதாக கூறிய விடயத்தை மீள பெற வேண்டும், யாரும் சபையில் இதற்காக பணம் வாங்கவில்லை.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த மாதம் 08ம் திகதி இந்த களியாட்ட நிகழ்வுகள் தொடர்பாக கடிதமொன்று கிடைக்கப்பெற்றிருந்தது, சபைக்கு வருமானம் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் இக்களியாட்ட நிகழ்வுக்கு அனுமதி வழங்குவோமென அன்று நிதிக்குழுவிற்கு வருகை தந்த உறுப்பினர்கள் கருத்து தெரிவித்திருந்தோம். பின்னர் சபைக்கு அவ்விடயத்தை முன்வைத்திருந்தோம். அன்றைய தினம் இவ்விடயம் தொடர்பாக அனைத்து உறுப்பினர்களும் தமது கருத்தை தெரிவித்திருந்தனர். பின்னர் நாட்டின் சூழ்நிலை காரணமாகவும் மீண்டும் இந்நிலைமை சரியாகும் வரை இவ்வாறான விடயங்களுக்கு அனுமதி கொடுப்பது இல்லை என தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனக்கும் இது தொடர்பாக தொலைபேசி அழைப்பு வந்தது, நான் இதற்கு அனுமதி வழங்க மாட்டேன் என்று கூறிவிட்டேன், அதன் பின்னர் நகரத்தில் நிறைய வர்த்தகர்கள் இது தொடர்பாக கேட்டனர். அவ்வாறு களியாட்ட நிகழ்வை நடத்துவதாக இருந்தால் ஆர்ப்பாட்டம் செய்வதாக கூறினர். அவ்வாறு ஆர்ப்பாட்டம் எதுவும் செய்ய வேண்டாம், தப்பேதும் நடந்திருந்தால் மன்னித்து விடுங்கள் என்று நான் கேட்டுக்கொண்டேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஒருவர் பாதிக்கக்கூடாது என்பதற்காக எடுத்த ஒரு தீர்மானமே தவிர, சபையில் எடுத்த தீர்மானத்தை புறக்கணிக்கவில்லை.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடயம் தொர்பாக சில விடயங்களை கூறிவிட்டு இவ்விடயத்தை முடிக்கலாமென நினைக்கிறேன், இவ்விடயத்தில் எனது பெயரும் அடிப்பட்டது. களியாட்ட நிகழ்வுக்கு சம்பந்தப்பட்ட உரிமையாளருடன் மஸ்கெலியா நகருக்கு இதனை கொண்டு வந்தவருடன் என்னுடன் முரண்பட்ட குரல் பதிவு கூட என்னிடமுள்ளது, இவ்விடயம் முற்றுமுழுதாக பிழை என்பதனை கௌரவ தவிசாளர் அவர்கள் ஏற்றுக்கொள்ள தான் வேண்டும். எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அப்பால் சென்றது பிழை என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். அக்குரல் பதிவில் தகாத வார்த்தைகள் பேசப்பட்டுள்ளது. இல்லாவிட்டால் அக்குரல் பதிவை நான் போட்டு காட்டுவேன். இவ்விடயத்தை தொடர்ந்து இடடுச்செல்ல வேண்டாம். இதற்கு சம்பந்தப்பட்டவர் எனக்கு தெரிய மஸ்கெலியா நகரத்தில் இருக்கின்ற பெயரை சுட்டிக்காட்டலாமென நினைக்கின்றேன், நகுலேஸ்வரன் என்பவருடன் தஞ்சமடைந்து அவரினூடாகவே இவ்விடயம் பொரும்பாலும் இவ்விடயம் வந்ததாக கூறப்படுகின்றது. இது உண்மையா பொய்யா என்ற விடயம் இவ்வொலிபதிவில் உள்ளது. இவ்வாறு நிறைய இடங்களில் சென்று பேசியுள்ளார். எனவே சபையில் நடக்கும் விடயங்களை சபை உறுப்பினர்களோடு இங்கேயே முடிப்பது நன்மையாக அமையும், இல்லாவிட்டால் சபைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் பிழைகளுடன் சபையறிக்கை சரியென நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**தீர்மான இல 01**

2022.04.11 சபையறிக்கை சரியென சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இந்த சபையறிக்கை பிழை அல்ல, அறிக்கையில் இவ்விடயத்தை செய்தால் பாதிப்பு வருமென்று பேசிய விடயங்கள் இருக்கின்றது. எனினும் இவ்விடயம் வெளியில் மழுங்கடிக்கப்பட்டுள்ளது. சபை தீர்மானம் கொச்சைப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை பதிவு செய்து அதற்கான விசாரணை ஒன்று வேண்டும் என்பது தான் எமது தீர்மானம்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் ஆனந்தராஜ் அவர்கள் கூறிய கையூட்டு தொடர்பான விடயத்தை நிரூபிக்க வேண்டும். கடிதம் மூலம் தாங்கள் தரவேண்டும். ஏனென்றால் இவை சபையறிக்கையில் வரும். இதுவரை கௌரவ தவிசாளர் என்ற ரீதியில் நான் யாரிடமும் கைநீட்டியது இல்லை, அதுபோல கையூட்டலில் ஈடுபடாத பல கௌரவ உறுப்பினர்கள் உள்ளனர் அவர்களின் நற்பெயரும் இதில் கலங்கம் ஏற்படும்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இன்று கௌரவ உறுப்பினரிடம் கடிதம் கேட்டது போல பலப்பிரச்சினைகளை நாங்கள் முன்வைத்திருந்தோம், அவ்வளவு பேரும் கடிதம் கொடுத்திருந்தால் என்ன நடக்கும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நான் இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட உறுப்பினரிடம் தான் கடிதம் கேட்டேன். இன்று எனது விசேட உரையிலே இலங்கை உள்ளூராட்சிகள் சம்மேளனம் மற்றும் கனடா உள்ளூராட்சி நிறுவனம் இணைந்து நடத்தும் வேலைத்திட்டம் தொடர்பானதாகும். இவ்வேலைத்திட்டத்திற்குள் உள்வாங்குவதற்காக இலங்கையில் உள்ள 512 உள்ளூராட்சி நிறுவனங்கள் விண்ணப்பித்திருந்தன, இதன் தெரிவின் போது முதற்கட்டமாக 12 உள்ளூராட்சி நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன அதில் எமது சபையும் உள்வாங்கப்பட்டிருந்தது, பின்னர் இறுதி கட்ட தேர்வில் இலங்கை முழுவதிலும் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்களில் ஐந்தில் ஒரு உள்ளூராட்சி நிறுவனமாக எமது மஸ்கெலியா பிரதேச சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது என்பதனை உங்கள் அனைவருக்கும் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இவ்வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக 2022.05.09ம் திகதி குறித்த நிறுவனத்தினரால் மஸ்கெலியா பிரதேச சபையின் கௌரவ உறுப்பினர்கள் உத்தியோகத்தர்களுக்கிடையிலான கலந்துரையாடல் மற்றும் அறிமுக நிகழ்வொன்று நடைபெற்றது, அந்நிகழ்வின் போது குறித்த வேலைத்திட்டம் தொடர்பான முழு விபரங்களும் விளங்கப்படுத்தப்பட்டது, இவ்வேலைத்திட்டமானது 06 வருடங்களுக்கு எமது சபையில் முன்னெடுக்கப்படும், பாலின சமத்தும், பெண் அரசியலை ஊக்குவித்தல், பின்தங்கிய சமூகத்தின் அபிவிருத்தி மற்றும் நிதி உதவிகள் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இவ்வேலைத்திட்டத்தினை எமது சபையில் நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் குறித்த நிறுவனத்தினருடன் ஒரு ஒப்பந்த அடிப்படையிலான விடயங்களை மேற்கொள்ளவிருப்பதனால் அதற்கான சபை அனுமதி கோரப்படுகின்றது, எனவே இவ்வேலைத்திட்டத்தை முன்னெடுக்க சபை அனுமதியினை கோருகின்றேன், அத்துடன் இவ்வேலைத்திட்டத்திற்காக எமது சபையினை தெரிவு செய்வதற்காக நடவடிக்கை மேற்கொண்ட கௌரவ உறுப்பினர்கள், செயலாளர், காரியாலய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இவ்வேலைத்திட்டத்தில் எமது சபையினை உள்வாங்குவதற்காக நடவடிக்கை எடுத்த குறித்த நிறுவனத்தின் தெரிவுக்குழுவிற்கும், உள்ளுராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் பிரதான செயற்பாட்டு அதிகாரி அவர்களுக்கும், நிறைவேற்று பணிப்பாளர் அவர்களுக்கும் ஏனைய வேலைத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

கடந்த 09ம் திகதி நடைபெற்ற இவ்விடயம் தொடர்பான கூட்டத்திற்கு நானும் வருகை தந்திருந்தேன். இவ்விடயத்தினை வரவேற்பதோடு உண்மையில் இதற்காக நன்றி கூற வேண்டும். இலங்கையிலுள்ள அனைத்து உள்ளுராட்சி நிறுவனங்களில் தெரிவு செய்த 05 நிறுவனங்களில் மஸ்கெலியாவையும் தெரிவு செய்துள்ளமைக்கு நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன், இது சபையினூடாக நடைபெறவிருக்கும் வேலைத்திட்டம் என்பதனால் நேர்மையாகவும் மக்கள் பயனடையக்கூடிய வகையிலும் அதன் சேவைகள் சென்றடைய வேண்டும். இவ்விடயத்திற்கு எங்களின் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதோடு இவ்வேலைத்திட்டத்தை சபைக்கு வழங்கிய அந்த நிறுவனத்திற்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S. சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்வேலைத்திட்டத்தில் எமது சபையினையும் உள்வாங்க முழுமையாக ஈடுபட்ட செயலாளர் அவர்களுக்கு தான் வாழ்த்துக்களை தெரிவிக்க வேண்டும், ஏனென்றால் அவர்கள் வழங்கிய குறுகிய நேரத்தில் அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொண்டு தகவல்களை கொடுத்ததன் பயனாகவே எமது சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒரு பெண் தலைவர் எமது சபையில் காணப்படுவதனால் கூட எமது சபை தெரிவு செய்யப்பட்டிருக்கலாம். இவ்வேலைத்திட்டதின் கீழ் 06 வருடங்களுக்கு மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் உறுப்பினர்களின் பங்களிப்பு வழங்கப்படும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

அன்றைய கூட்டத்தில் சபைக்கான கட்டிடமொன்றை அமைத்து தருவது தொடர்பான விடயம் கலந்துரையாடப்பட்டது, எனவே அதற்கான ஆவணங்களை நாம் தயார்படுத்திக்கொடுத்தால் நன்மையாக அமையும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அவ்வாறு ஆவணங்களை தயாரிக்க பொறியியலாளர் ஒருவரின் சேவையினை நாம் பெற வேண்டி இருக்கும் அதற்கும் சபை அனுமதியினை பெறவேண்டி வரும்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

அன்றைய தினம் இடம் சம்பந்தமாக நான் கூறியிருந்தேன், அவ்விடத்தை பெற்றுக்கொள்ள நாம் ஏதும் செய்ய முடியாதா?

**தீர்மான இல 02**

குறித்த வேலைத்திட்டத்தினை முன்னெடுக்க சபை ஏகமனதாக சபை அனுமதி வழங்கியது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அதற்கான வேலைகள் அனைத்து நடந்து முடிந்து விட்டது, அடுத்ததாக சபைக்கு கிடைக்கப்பெற்ற கடிதங்கள் மற்றும் முறைப்பாடுகளை சபைக்கு சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**கடித இல 01**

**அனுப்புனர்** - பிரதேச செயலகம் - அம்பகமுவ கோரளை.

**விடயம்** - நடமாடும் சேவை தொடர்பான கடிதம்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்விடயம் 02ம் மாதமளவில் பிரேரணை முன்வைத்திருந்தேன், அதற்கமைவாக சபையில் கடிதமனுப்பியிருந்தீர்கள் அதன் கடித பிரதியும் கிடைத்திருந்தது, கடந்த வருடம் பிரவுன்லோ இடம் தொடர்பாக பிரேரணை முன்வைத்திருந்தேன், அதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருந்தது. சபையை குற்றஞ்சாட்டும் ஆள் நான் இல்லை. இவற்றிற்காக சபைக்கும், பிரதேச செயலகத்திற்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இந்நடமாடும் சேவைக்கான ஒத்துழைப்பை அனைவரும் வழங்குவோமென தெரிவித்துக்கொள்கின்றென்.

**கடித இல 02**

**அனுப்புனர்** - உள்ளுராட்சி துணை ஆணையாளர் காரியாலயம்.

**விடயம்** - கௌரவ உறுப்பினர்களின் தகவல்களை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கடிதம்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இதுவரை சொத்து விபரங்களை வழங்காத உறுப்பினர்கள் அவ்விபரங்களை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், அடுத்ததாக நிதி மற்றும் ஏனைய குழு அறிக்கையினை சமர்ப்பித்தல்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தவிசாளர் அவர்களே நிதிக்குழுவில் எடுக்கப்பட்ட பிரதேச சபையின் கௌரவ உறுப்பினர்களுக்காக பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் வேலைத்திட்டத்தினை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு கலந்துரையாடப்பட்டுள்ளது. இதற்காக நிதிக்குழுவிற்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நிதி அமைச்சில் இருந்து அத்தியாவசிய வேலைத்திட்டங்களை மாத்திரம் நடைமுறைப்படுத்த கூறியுள்ளனர், எனவே அவ்வாறான விடயங்களை கவனத்திற்கொள்ளவும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

அது தான் அவ்வாறான தெளிவினை சபை வழங்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

2022.05.09ம் திகதி நடைபெற்ற நிதிக்குழு அறிக்கையில் விடய இல 03இல் மஸ்கெலியா பிரதேச சபையின் சுகாதார மேற்பார்வையாளராக கடமையாற்றும் எஸ்.ஆனந்தன் அவர்கள் தொடர்பான விடயம் கலந்துரையாடப்பட்டு விசாரணை மேற்கொள்ளல் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது, அவர் மீதான முறைப்பாடு என்ன? அது எழுத்து மூலமாக கையளிக்கப்பட்டுள்ளதா அல்லது அது தொடர்பான விடயங்களை பார்க்க வேண்டும். நிதிக்குழு தீர்மானமொன்றை எடுத்துள்ளது. ஆனால் என்ன பிரச்சினை என்பது தொடர்பாக குறிப்பிட வேண்டும். ஒரு உத்தியோகத்தர் தொடர்பாக நிதிக்கழுவில் ஒரு தெளிவான தீர்மானங்களை வரவேற்றும் அதே வேளை அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பார்க்க வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஒரு உத்தியோகத்தர் மீது குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாமல் எதுவும் செய்ய முடியாது விசாரணை தினத்தன்று நிரூபிக்கப்பட்டு விட்டால் விசாரணை அதிகாரியினூடாக அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தவிசாளர் அவர்களே காரியாலயத்தில் ஒரு உத்தியோகத்தர் தொடர்பான குற்றச்சாட்டு ஒன்றை முன்வைக்கும் போது அது நிதிக்குழுவினூடாக கலந்துரையாடப்படுமா? அல்லது தனியாக விசாரணை குழுவொன்று இருக்குமா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இப்படி ஒரு விடயம் நடைபெற்றுள்ளது, அதனை விசாரிக்கும்படி கூறியுள்ளனர்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்விடயம் நிதிக்குழுவில் வருவதற்கு என்ன காரணம்?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

மேலதிக நேர கொடுப்பனவு தொடர்பாக நிதிக்குழுவில் கலந்துரையாடப்படும் போது தான் இவ்விடயம் முன்வைக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

அவர் காரியாலயத்தில் பணிப்புரியும் ஒரு உத்தியோகத்தர் அதனை சபைக்கு சமர்ப்பிப்பதில் அது பொது விடயம் தானே, தற்போது அவரின் பெயரை குறிப்பிட்டு தானே பேசுகின்றோம், இதனால் அவருக்குள்ள மதிப்பும், கௌரவ பிரச்சினையும் இருக்கும் தானே? அவருக்கான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றாலும் அது சபை நிர்வாகத்திற்கு தான் உள்ளது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சபைக்கு வரவில்லை, நிதிக்குழு உறுப்பினர்களுக்கு வந்ததனை நிதிக்குழுவிற்கு சமர்ப்பித்துள்ளனர்.

**கௌரவ உறுப்பினர் S. சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்விடயத்தை நிதிக்குழுவில் கலந்துரையாட நிதிக்குழுவிற்கு கடிதமெதுவும் சமர்ப்பிக்கப்பட்டதா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நிதிக்குழு உறுப்பினர் ஒருவருக்கு இது தொடர்பான பிரச்சினை ஒன்று சென்றுள்ளது அதனால் அவ்விடயத்தை இங்கு சமர்ப்பித்திருந்தார், இவ்விடயத்தை விசாரிக்கும் போது குறித்த கௌரவ உறுப்பினர் அதனை நிரூபிப்பார்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

தொடர்ச்சியாக எல்லாவிடயங்களையும் முரண்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதற்காக நாங்கள் கேட்கவில்லை, இக்கருத்தை முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன், இந்த 04 வருடங்களில் நிதிக்குழு அறிக்கையினை நாங்கள் பார்த்துள்ளோம், ஒரு உத்தியோகத்தர் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டதில்லை, அவை அனைத்தும் செயலாளரின் கீழ் எடுக்கப்படும் தீர்மானங்களாக தான் இருக்கும். ஒரு உத்தியோகத்தர் மீது குற்றசாட்டொன்று முன்வைக்கப்படும் போது அதனை நிதிக்குழு கலந்துரையாடலாம், அதற்கான விசாரணை கோர அதற்கான சட்டரீதியான வகையில் இல்லை. சபைக்கு ஒரு முறைப்பாட்டு கடிதமாக வந்திருக்கும் பட்சத்தில் அதனை சபை தீர்மானமாக எடுக்கலாம். நிதிக்குழு தீர்மானம் எடுக்க முடியாது. நானொரு முறைப்பாட்டை முன்வைப்பேனேயானால் நான் அதனை கூறலாம், சபையறிக்கையில் பதியப்படும் போது அதனை ஒரு ஆவணமாக காட்டலாம், மறுப்பக்கம் சொல்லும் போது சமர்ப்பிப்பார் என்பது சபைக்கு ஏற்புடையதாக இல்லை. இங்கு நிர்வாகத்திற்கு பொறுப்பானவர் என்ற ரீதியில் என்ன செய்தால் சரியாக இருக்குமென செயலாளர் கூறினால் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளலாம். மிக தெளிவானதொரு தீர்மானத்தை எடுக்கவும்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சுகாதார மேற்பார்வையாளர் பற்றிய விடயத்தை பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளது, சபை ஆரம்பித்து இத்தனை ஆண்டுகளில் பெயர் குறிப்பிட்டு அவர் குற்றமிழைக்கப்பட்டவர் என்று கூறி சபையில் ஒரு வாத விவாதத்திற்கு செல்லவில்லை. சிரேஸ்ட உறுப்பினர் கூட பெயர் குறிப்பிட்டு பே வேண்டாமென கூறியுள்ளார். முதலில் குறிப்பிட்ட நபர் குற்றமிழைத்தவரா என்பற்கு ஆதாரம் இருக்கின்றதா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடயத்தினை கௌரவ உறுப்பினர் நிதிக்குழுவிற்கு முன்வைத்த போது எனக்கு வாக்களித்த மக்கள் என்னிடம் முறைப்பாடொன்றை முன்வைத்துள்ளனர், அதனை நான் இங்கு தானே முன்வைக்க முடியும் என்று கூறினார்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சம்பந்தப்பட்ட நபர் மீது பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்துள்ளார். இதிலிருந்த ஏனைய நபர்கள் கடிதம் வழங்குவார்களா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

வழங்குவார்கள்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நாளைக்கு இவ்விடயம் விசாரணைக்கு வரும் போது அந்த நபர் கடிதம் கொடுக்காத பட்சத்தில் கடிதம் கொடுக்காத வேளையில் சபை கேளிக்கூத்தாகும் தானே?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஆதாரம் இல்லாமல் இங்கு சமர்ப்பித்திருக்க மாட்டார்கள் தானே?

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்விடயம் நிதிக்குழுவில் கலந்துரையாடப்பட்டதன் பின்னர் தாங்களும், செயலாளரும் இணைந்து குறித்த நபரை விசாரணை செய்து விட்டு பின்னர் உறுப்பினர்களுக்கு சமர்ப்பித்திருக்கலாம். தற்போது விசாரணையின் படி அவர் குற்றம் இழைக்கப்படாதவர் என்று கண்டறியப்பட்டால் நாம் அனைவரும் தலைகுனிந்து தான் நிற்க வேண்டும். சபையில் சிறந்த உத்தியோகத்தர்கள் பலர் உள்ளனர், அதேவேளை சில உத்தியோகதர்தர்கள் மீது குறைபாடு கிடைக்கப்பெற்றுள்ளது, நாங்கள் நிதிக்குழுவில் இருக்கும் போது இவ்விடயங்களை முன்வைத்திருந்தால் இன்று நிறைய உத்தியோகத்தர்கள் இருக்க மாட்டார்கள்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

சுகாதார மேற்பார்வையாளர் எஸ்.ஆனந்தன் அவர்கள் மேலதிகமாக வேலை செய்தமைக்காக மேலதிக நேர கொடுப்பனவு சபை நிதியினூடாக வழங்கப்பட்டுள்ளது, ஆகவே வழங்கப்பட்ட நிதிக்கு வேலை செய்யவில்லை என்று மக்களால் புகார் வந்துள்ளது என்பதற்காக தான் நிதிக்குழுவில் இவ்விடயம் கலந்துரையாடப்பட்டுள்ளது. என்னுடைய வாதம் என்னவொன்றால், அவர் மேலதிக வேலை செய்யாத நேரத்தில் அவருக்கு ஏன் செயலாளர் அவர்கள் மேலதிக கொடுப்பனவு வழங்கியுள்ளீர்கள்?

**(தவிசாளரின் அனுமதியுடன் செயலாளரினால் பதில் வழங்கப்பட்டது.)**

**செயலாளர்**

அவர் வேலை செய்துள்ளார், அதன் காரணமாக தான் அவருக்கு மேலதிக நேர கொடுப்பனவு வழங்கியிருக்கின்றேன், எனினும் அவர் வேலை செய்யவில்லை என்று மக்கள் புகார் அளித்துள்ளனர் என்று நிதிக்குழு உறுப்பினர்களுக்கு தெரிவித்துள்ளமையினால் இவ்விடயம் விசாரணைக்கு சென்றுள்ளது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

அப்படியானால் அவர் வேலை செய்துள்ளார் என்று நிதிக்குழுவிற்கு தெளிவுப்படுத்தியிருக்கலாமே?

**செயலாளர்**

நான் தெளிவுப்படுத்தியிருந்தேன், அத்தோடு சேர்த்து அவர் மீது வேறு பிரச்சினைகள் உள்ளதாக கூறியுள்ளனர், ஆகவே விசாரணைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சரி அந்த விசாரணையின் அடிப்படையில் அவர் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டுவிட்டால் மேலதிக நேர கொடுப்பனவிற்கு அனுமதி கொடுத்தது தாங்கள், அப்போது தாங்களும் பிழை என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**செயலாளர்**

ஆம், அச்சந்தர்ப்பத்தில எனக்கு ஞரசஉாயசபந பண்ணப்படலாம்.

**கௌரவ உப தவிசாளர் P.P.பிரதீபன் அவர்கள் (இ.தொ.கா)**

தவிசாளரின் அதிகாரத்தை பயன்படுத்தி முதலில் இவ்விடயம் தொடர்பாக விசாரணை ஒன்றை செய்துவிட்டு பின்னர் அவ்விடயத்தை உள்ளூராட்சி துணை ஆணையாளருக்கு அறிவித்திருக்கலாம், நேரடியாக அங்கு சமர்ப்பித்தது பிழை.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

குறித்த உத்தியோகத்தரை இவ்விடயம் தொடர்பாக பலமுறை அழைத்து நான் பேசியுள்ளேன்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

விடய இல 03இற்கான சிபாரிசுக்கு நாங்கள் முழுமையான ஆதரவு அதே வேளை ஆவண ரீதியாக அவற்றை உட்படுத்த தீர்மானத்திற்கு இல 03இற்கு நாங்கள் முழுமையாக ஆதரவை வழங்குகின்றோம்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்விடயம் போல நிதிக்குழுவிற்கு ஏனைய முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் போது அதனையும் ஏற்றுக்கொண்டு அவர்களையும் விசாரணை மேற்கொள்ள வேண்டும். மேலும் விடய இல 06இன் படி 2022ம் ஆண்டு உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியினை எந்த அடிப்படையில் பெற்றுத்தருவீகள்? விரைவில் அதனை பெற்றுதரவும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

மக்களுக்கு தற்போது அத்தியாவசியமான வேலைகளை மாத்திரம் செய்யவும்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்விடயத்தில் இன்னொரு விடயத்தை பதிவு செய்கின்றேன் என்னுடைய 2021ம் ஆண்டுக்கான நிதிக்கான வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதில் பிரச்சினை ஏற்பட்டிருந்தது, அதன் காரணமாக அதற்கான மாற்று வேலைத்திட்டமொன்றை செய்யவுள்ளேன், எனக்கு அந்த நிதிக்கான அனுமதியினை பெற்று தரவும்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் புதிய பிரதமராக பதவி ஏற்றுள்ள எங்களுடைய கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கு வாழ்த்துக்களை கூறி, இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீக்கம் காரணமாக எமது நாடு பாதிப்படைந்துள்ளது. எங்களுடைய சபையின் செலவறிக்கையினை உற்று நோக்கினால் , பல்வேறு செலவீனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது, மேலதிக கொடுப்பனவு தொடர்பாக பாரிய தொகையினை நாம் வழங்குகின்றோம். அது தொடர்பாகவும் அதிக கவனம் செலுத்துமாறு தவிசாளர் அவர்களை கேட்டுக்கொள்கின்றேன். நான் தனிப்பட்ட ரீதியில் யாரையும் குறிப்பிடவில்லை. சபை ஆரம்பித்தில் இருந்து தற்போது வரை உத்தியோகத்தர்கள் அதிகரித்துள்ளனரா அல்லது குறைவடைந்துள்ளனரா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அதிகரித்துள்ளனர்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

எங்களுடைய சபையின் பாரிய பொறுப்பு நகரங்களை நேர்த்தியான முறையில் பராமரித்தல் ஆகும், மலசலகூட கழிவுகளை அகற்றும் இயந்திரம் 04 வருடமாக எம்மிடம் இல்லை. நாங்கள் எவ்வளவோ கேட்டுபார்த்து விட்டோம் ஆனால் அதனை இன்றுவரையில் பெற்றுக்கொள்ள முடியவில்லை. உள்ளூராட்சிமன்ற ஆணையாளருக்கு எம்முடைய சேவையென்பது என்னவென்று தெரியுமா என்று தெரியவில்லை. எத்தனை முறை கேட்டும் அதனை செய்து தரவில்லை. இதனால் மக்களுக்கு முகங்கொடுப்பதில் நாங்கள் பாரிய சிக்கலுக்கு முகங்கொடுத்துள்ளோம். அதிகளவு பணம் செலுத்தி மக்கள் கலி இயந்திரத்தை வெளியிடங்களில் இருந்து பெற்றுக்கொள்கின்றனர், பி.சண்முகராஜ் கிட்டதட்ட 8000ரூபா, டேவிட் கிட்டதட்ட 5000ரூபா, ருசானி செவ்வந்தி கிட்டதட்ட 4000ரூபா இதில் என்ன ஒரு சிக்கலை நாம் உற்று நோக்கின்றோம் என்றால் கருணாதிலக்க 3000ரூபா, கருணாதிலக்க 1500ரூபா இவர்களுடைய தொழில் என்ன? செவ்வந்தி என்கின்ற உத்தியோகத்தர் அவருடைய முகாமைத்துவ உத்தியோகத்தர் என்ற விடயத்திற்கு சற்று அங்கு சென்றாலும் நாம் கொடுப்பனவு வழங்க வேண்டுமா? எமது செயலாளர் விடுமுறை தினங்களில் கூட அலுவலகத்தில் இருப்பார், சாமிமலை, மஸ்கெலியா வாசிகசாலைக்கு பத்திரிகை கட்டணம் 20,000ரூபா செலுத்தப்படுகின்றது, தற்போது பத்திரிகை வாசிக்க யாரும் வருகின்றார்களா? தவிசாளரின் வாகனத்திற்கு 90,000ரூபா கட்டுகின்றோம், சாரதிக்கு கிட்டதட்ட 36,000ரூபா, இணைப்பு செயலாளருக்கு 25,000ரூபா அதில்லாமல் பிரயாண கொடுப்பனவு 10,000ரூபா.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நான் கூட்டங்களுக்காக வெளியில் செல்லும் போது நான் சாப்பிடுவது இல்லையா? சாரதிக்கு உணவு பெற்றுக்கொடுப்பது இல்லையா?

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

அலுவலகத்தில் மேலதிக ஒரு சிறிய வேலை செய்தாலும் அதற்கு கொடுப்பனவு வழங்குகின்றோம் என்றால் அதில் என்ன அர்த்தம்? ஒருவர் அவரது சம்பளத்தையும் பெற்றுக்கொண்டு மேலதிக கொடுப்பனவாக 25,000ரூபாவையும் பெற்றால் என்ன நியாயம்? எமது சபையில் எல்லாம் இல்லை, குறிப்பிட்ட சிலர் பாதிக்கு பாதி பேர் சும்மா தான் உள்ளனர். கண்காணிப்பு கமராக்கள் பொருத்த சொன்னோம் அதனையும் செய்யவில்லை. முன்னர் கினிகத்தேனவிற்கு சென்று இலகுவில் செய்துகொண்டு வரவேண்டிய வேலையை மஸ்கெலியா நகரிலுள்ளவர் எமது சபையில் செய்ய 06 மாதம் 01 வருடமாக செய்துக்கொள்ள முடியாது. கௌரவ உறுப்பினர்கள் யாருமே நேரடியாக சென்று உத்தியோகத்தர்களிடம் சென்று பேச முடியாது அது தான் சட்டம். தவிசாளர், செயலாளர், பிரதான முகாமைத்துவ சேவை அதிகாரியும் இல்லையென்றால் நாங்கள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரையே நாட வேண்டியுள்ளது. ஆனால் எங்களை மதிக்க வேண்டும் தானே? மக்கள் சேவைக்காக தானே நாம் உள்ளோம். வேலை செய்பவர்கள் நிறையபேர் உள்ளனர். ஏனைய ஊழியர்கள் தங்களின் கடமையினை துஷ்பிரயோகம் செய்கின்றனர். இது உண்மை இனிமேல் சரி இவற்றை தவிசாளர், செயலாளர் கவனத்திற்கொள்ளவும். தலைமைத்துவத்தில், செயலாளரும் இல்லாத சந்தர்ப்பத்தில் ஏதாவது அவசர தேவைக்காக வரும் போது நாங்கள் யாரை சந்திப்பது? இதில் பாரிய பிரச்சினை. இவ்வளவு சலுகை வழங்கி மேலதிக நேர கொடுப்பனவு வழங்கியும் அவர் 03.30மணி பஸ்ஸிற்கு செல்வாராயின் எதற்கு மேலதிக கொடுப்பனவு வழங்குகின்றீர்கள்?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் கூறும் விடயங்களுக்கு அனைத்து உத்தியோகத்தரையும் தனிப்பட்ட ரீதியில் செயலாளர் முன்வைத்து கூறியுள்ளேன், நான் பார்க்காமல் இல்லை, நான் இல்லாத நேரங்களில் எப்படி என்று தெரியவில்லை இனிவரும் காலங்களில் பார்ப்போம்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

செலவறிக்கையில் 11 தற்காலிக ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது, அதில் கழிவகற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் ஊழியர்கள் எத்தனை பேர்?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

08 பேர்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இவர்களுக்கு மேலதிக கொடுப்பனவு வழங்குகின்றோமா? இல்லையே. கழிவகற்றுதல் என்பது எமது பிரதான கடமைகளில் ஒன்று. அந்த அடிப்படையில் இந்த 08 ஊழியர்களின் பங்களிப்பும் திருப்பதிகரமாக உள்ளதென நினைக்கின்றேன். எனினும் இன்று வரை அவர்களுக்கு நிரந்தர நியமனம் பெற்றுக்கொடுக்கப்படவில்லை. அவர்கள் பெறுகின்ற சம்பளத்திற்கு மேலதிகமாக வேலை செய்கின்றனர், கொவிட் காலகட்டத்தில் நாம் அனைவரும் வீட்டில் இருந்தோம் அப்போது கூட அவர்கள் பணிக்கு வருகை தந்திருந்தனர், ஒரு உத்தியோகத்தருக்கு கிட்டதட்ட 12,000ரூபா மேலதிக நேர கொடுப்பனவு வழங்கும் போது தற்காலிக ஊழியர்களுக்கும் ஏதாவதொரு சலுகையினை பெற்றுக்கொடுக்க வேண்டும். இன்னும் அவர்களுக்கு நியமனம் பெற்றுக்கொடுக்கப்படவில்லை, நிரந்தர நியமனம் இருந்தால் மாத்திரமே அவர்களுக்கான அனைத்து சலுகைகளையும் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் நிதிக்குழு உறுப்பினர்களிடம் ஒரு அன்பான வேண்டுகோள் செலவீனங்களை குறைக்கும் அதே வேளை உண்மையாக வேலை செய்பவர்களுக்கு வேதனத்தை அதிகரித்து வழங்கவும் ஏதாவது நடவடிக்கை எடுக்கவும்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

நிதிக்குழு அறிக்கை சரியென நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.G.K.பெரேரா அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**2022.05.09ம் திகதி நடைபெற்ற நிதிக்குழு அறிக்கையின் சிபாரிசுகள் பின்வருமாறு தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன.**

**விடய இல 01**
சபையினூடாக மேற்கொள்ளப்படும் வீதி விளக்கு திருத்த வேலைகளை தொடர்பாக விடயம் நிதிக்குழுவில் கலந்துரையாடப்பட்டது.

**தீர்மான இல 03**
இனிவரும் காலங்களில் வீதி விளக்கு திருத்த வேலைகளை மேற்கொள்ள செல்லும் போது குறித்த வட்டார உறுப்பினரினை தொடர்பு கொண்டு அவரின் சிபாரிசினை பெற்றதன் பின்னரே குறித்த உத்தியோகத்தருக்கான பிரயாண கொடுப்பனவினை செலுத்த நிதிக்குழு சிபாரிசு செய்த விடயத்தை சபை ஏற்றுக்கொண்டது.

**விடய இல 02**
மஸ்கெலியா பிரதேச சபையின் சுகாதார மேற்பார்வையாளராக கடமையாற்றும் திரு எஸ். ஆனந்தன் அவர்கள் தொடர்பாக நிதிக்குழு உறுப்பினர்களினூடாக பொது மக்கள் கூறியதிற்கிணங்க சில முறைப்பாடுகள் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டன.

**தீர்மான இல 04**
மேற்குறித்த விடயம் தொடர்பாக கலந்துரையாடியதற்கமைய உள்ளூராட்சி துணை ஆணையாளர் காரியாலயத்தின் விசாரணை அதிகாரிக்கு இவ்விடயத்தை தெரிவித்து விரைவில் விசாரணை ஒன்றை மேற்கொள்ள சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 03**
நல்லதண்ணியில் கமிசன் டென்டர் முறையில் வழங்கப்பட்டுள்ள வாகன தரிப்பிடம் தொடர்பாக நிதிக்குழுவில் கலந்துரையாடப்பட்டது.

**தீர்மான இல 05**
மேற்குறித்த விடயம் தொடர்பாக கலந்துரையாடியதற்கிணங்க திடீர் விஜயத்தை மேற்கொண்டு பரிசோதனைகளை மேற்கொள்ள நிதிக்குழு சிபாரிசு செய்த விடயத்தை சபை ஏற்றுக்கொண்டது.

**விடய இல 04**
திரு.M.ரட்ணம் என்பவரினால் தற்காலிக கடைதொகுதி ஒன்றினை உரிய டென்டர் விதி முறைகளுக்கமைய பெற்றுத்தரும்படி கோரியுள்ள கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 06**
மேற்குறித்த கடிதம் தொடர்பாக கலந்துரையாடியதற்கமைவாக குறித்த நபரிடம் இருந்து 02 தவணைகளில் டென்டர் பணத்தினை பெற்றுக்கொண்டு உரிய விதிமுறைகளுக்கு அமைய கடையறை ஒன்றினை பெற்றுக்கொடுக்க சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 05**
03/2022 இலக்கமிடப்பட்ட நிதி அமைச்சின் சுற்றறிக்கை தொடர்பான விடயம் செயலாளரினால் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 07**
குறித்த சுற்றறிக்கையில் அரச செலவினங்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் கூறப்பட்டிருந்தாலும் 2022 சபை பாதீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட கௌரவ உறுப்பினர்களின் வேலைத்திட்டங்களை சபை நிதியில் மேற்கொள்ள சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 06**
மஸ்கெலியா பொது நூலகம் மற்றும் சாமிமலை வாசிகசாலைக்கு தேவையான பத்திரிகைகளை கொள்வனவு செய்வது தொடர்பாக நூலக பொறுப்பாளரினால் வழங்கப்பட்ட கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 08**
மேற்படி விடயம் தொடர்பாக அரச செலவினங்களை கட்டுப்படுத்தல் தொடர்பாக வெளியிடப்பட்ட 03/2022 பாதீட்டு சுற்றறிக்கையின் படி மஸ்கெலியா பொது நூலகம் மற்றும் சாமிமலை வாசிகசாலைக்கு அத்தியாவசியமான பத்திரிகைகளை மாத்திரம் கொள்வனவு செய்ய சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 07**
R.சுதாசினி, முகாமைத்துவ சேவை அதிகாரி அவர்களினால் மஸ்கெலியா பிரதேச சபையின் உத்தியோகத்தர்களுக்கு விடுதியினை கோரியுள்ள கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 09**
மேற்குறித்த விடயம் தொடர்பாக அரச விடுதியினை பெற்றுக்கொடுக்கவும் அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்த பணிகளில் அரைவாசி திருத்த வேலைகளை சபை நிதியினூடாகவும் ஏனைய திருத்த வேலைகளை அவரது சொந்த நிதியினூடாக செலவிட்டு திருத்தியமைத்துக்கொள்ளவும் சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 08**
ஆயர்வேத வைத்தியசாலைக்கு தேவையான மருந்துப்பொருட்களை கொள்வனவு செய்வது தொடர்பான விடயம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 10**
சபை நிதியினூடாக தேவையான மருந்துப்பொருட்களை கொள்வனவு செய்ய சபை அனுமதி வழங்கியது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இச்சபையினை அமைதியாக நடாத்திச் செல்ல ஒத்துழைப்பு வழங்கியமைக்கு நன்றி. இத்துடன் இச்சபை இனிதே நிறைவுறுகின்றது.

நன்றி வணக்கம்.

**G.செண்பகவள்ளி,**
**கௌரவ தவிசாளர் அவர்கள்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**

**S..ராஜவீரன்,**
**செயலாளர்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**